பக்கங்கள்:-17

காலை முரசு

## 15 வயது சிறுவன் வெட்டிக்கொலை!

**தென்னிலங்கையில் பயங்கரம்**

இரு குடும்பங்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் சிறுவன் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் தந்தை உள்ளிட்ட மூவர் 02▶

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 28 | ஞாயிற்றுக்கிழமை | 15.10.2023 | அதிர்வு 75

# ஜெய்சங்கரின் பாதுகாப்பு அதிரடியாக அதிகரிப்பு!

## கொழும்பு விஜயம் செய்த அவர் விரைந்து திரும்பியதும் அதனால்



**புதுடில்லி, ஒக்டோபர் 15**

**இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் மிக மோசமாக வெடித்துள்ள சூழலில், இஸ்ரேலுக்கு முழு ஆதரவான நிலைப்பாட்டை உடனடியாகவே இந்தியா பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ள பின்புலத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரின் (வயது 68) பாதுகாப்பு திடுதிப்பெனத் தீவிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.** 03▶

# உக்கிரமடையும் ஹமாஸ் - இஸ்ரேல் மோதல் தீர்வு காண உலகளாவிய ஒற்றுமை அவசியம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



உக்கிரமடைந்து வரும் ஹமாஸ் – இஸ்ரேல் மோதலுக்குத் தீர்வு காண உலகளாவிய ஒற்றுமை அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இந்து சமுத்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச ஆராய்ச்சி நிறுவனமான Geopolitical Cartographer கொழும்பு சிட்டி சென்டரில் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். 02▶

# சுரண்டல்வாத பேராசை அரசியலை நாட்டில் இருந்து ஒழிக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



சுரண்டல்வாத பேராசை அரசியலை நாட்டில் இருந்து ஒழிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பிரபஞ்சம் ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் 35 ஆவது கட்டத்தின் கீழ் மாத்தறை ரதம்பல சுமங்கல மத்திய மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ஊழலும், மோசடியும் 03▶

# இஸ்ரேலுக்கு அனுமதியின்றி நுழைந்த இலங்கையர் ஒருவர் சுட்டுப் படுகொலை

## மேலும் இரு பெண்கள் கைது

சில தினங்களுக்கு முன்னர் இஸ்ரேலில் சுட்டுக்கொல்லப்பட்ட இலங்கைப் பெண் அனுமதியின்றி இஸ்ரேலுக்கு வந்துள்ளார் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண் மனிதக் கடத்தல்காரர்களிடம் 40 இலட்சம் ரூபாவைச் செலுத்தி இஸ்ரேலுக்கு வந்துள்ளமை தெரியவந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையர்கள் என நம்பப்படும் இரண்டு பெண்கள், ஜோர்தானில் இருந்து 02▶




‘சனல்–4’ தொலைக்காட்சிநிறுவனம்வெளியிட்ட காணொலி வெடிகுண்டு ஏற்படுத்திய அதிர்வலைகள் இப்போது இன்னொரு தொலைக்காட்சியின் பக்கம் திரும்பி இருக்கின்றன. அது – ஜேர்மனியின் ‘டொச்சவெலா’ தொலைக்காட்சி தான்.

ஜேர்மனிக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு அந்தத் தொலைக்காட்சிக்கு வழங்கிய 02▶

## உக்கிரமடையும் ஹமாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான மோதல் நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அதன் தற்போதைய போக்குகள் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்தும் விளக்கமளித்தார்.

பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளின் கண்டனத்திற்கு ஆளாகியுள்ள நிலையிலும், மில்லியனுக்கும் அதிகமான மக்களைகே காசாவின் தெற்குப் பகுதிச் செல்லுமாறு இஸ்ரேல் விடுத்துள்ள கோரிக்கை உள்ளிட்ட அண்மைக் கால நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதி விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மத்திய கிழக்கு நாடுகளும் மற்றைய முஸ்லிம் நாடுகளும் இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. இஸ்ரேல்தான் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் பலர் கூறினர். எவ்வாறாயினும் தாக்குதல்கள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. மேலும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஆண்டனி பிளிங்கன் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார்.

அமெரிக்கா தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது. காசா பகுதியின் வடக்குப் பகுதியில் வசிக்கும் மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் காஸாவின் தெற்குப் பகுதிக்கு உடனடியாகச் செல்லுமாறு இஸ்ரேல் கோரியுள்ளது. அதற்காக ஐக்கிய நாடுகள் சபையும் ஆபிரிக்க நாடுகள் சிலவும், ஐரோப்பிய நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அடுத்து என்ன நடக்கப் போகின்றது? காசாவில் வசிப்பவர்களை வெளியேறச் கோருவதால், இஸ்ரேல் காசாவுக்குள் நுழையப் போகின்றது என்றே தெரிகின்றது. காசா பகுதியில் இருந்து மக்கள் ஏன் வெளியேற்றப்பட்டனர்? காசா பகுதியில் ஏன் குண்டு வீசப்பட்டது? அது ஏதேவொரு நோக்கத்துடன் செய்யப்பட்ட விடயமாகும். இஸ்ரேலின் இந்த செயற்பாடு வீண்செயலாக இருக்க முடியாது என நான் கருதுகின்றேன்.

காசாவின் கட்டடங்கள் மீது குண்டுவீசி ஹமாஸ் போராளிகள் மறைந்திருக்கும் இடங்களை அழிக்க வேண்டும் என்பதே முதல் அத்தியாயம் என்று அவர்கள் கருதினர். காசாவுக்குச் ஹமாஸ் அமைப்பினரைத் தேடிப் பிடித்து சண்டையிட்டால் மற்றுமொரு பிரச்சினை ஏற்படும். இஸ்ரேல் அவ்வாறு செய்யும் போது ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேல் மீது படையெடுத்தால் நிலைமை பாரதூரமாகிவிடும். இன அழிப்பை விடவும் மோசமான நிலைமை ஏற்படக்கூடும்.

உக்ரைன், தாய்வான், மத்திய கிழக்கு மற்றும் காசா எல்லைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மோதல்களை கட்டுப்படுத்த முடியுமா? முடியுமென நான் நினைக்கவில்லை. மத்திய தரைக்கடலில் விமானம் தாங்கிய போர்க்கப்பல்களுடன் கூடிய இரு படைப்பிரிவுகள் செயற்படுமானால் அது பாரதூரமான நிலைமையாகும். அதனால் ஏற்படப்போகும் அளவுகடந்த பிரச்சினைகளின் விளைவாக நிலைமையை முகாமைத்துவம் செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

நான் ஹமாஸ் – ஹிஸ்புல்லா அமைப்புக்களை ஆதரிக்கவில்லை. நிலைமை எவ்வாறு மாறப்போகின்றது என்பது குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

காசா பகுதி அழிக்கப்பட்டுள்ளது. அதில் பகுதியளவான நிகழ்வுகள் மாத்திரமே பாலஸ்தீனத்தில் இடம்பெறுகின்றன.

லெபனனிலும் அதுவே நடக்கின்றது. அதனால் தீர்வுக்குச் செல்வதாயின் நான்கு நாடுகள் முன்வர வேண்டியது அவசியமாகும். சிரியாவைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்பதால் பழைய பாதையில் சென்று தீர்வைத் தேட முடியாது. புதிதாகச் சிந்திக்க வேண்டும்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பேட்டியின் போது செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்குப் பாய்ந்து விழுந்து, சீறிச் சினந்து, பதற்றத்துடனும் கோபத்துடனும் பதிலளித்தமை பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தி இருப்பது தெரிந்ததே.

இவ்வளவுக்கும் அந்தப் பேட்டியில் எழுப்பப்பட்ட கேள்விகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் திடுதிப்பெனக் என கேட்கப்பட்டவையல்ல. ஏற்கனவே இன்ன, இன்ன கேள்விகள் கேட்கப்படும் என்று ஜனாதிபதிக்கு நேரத்துடனேயே தெரிவிக்கப்பட்டிருந்ததாம். அப்படி இருந்தும் அக்கேள்விகள் கேட்கப்பட்டதும் பதறி அடித்து அவர் பதிலளித்தமை ஆச்சரியத்துக்குரியது என்று கொழும்பில் சிரேஷ்ட பத்திரிகையாளர் ஒருவர் தனிப்பட்ட முறையில் என்னிடம் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்த கேள்விகளுக்குப் பதில் அளித்த போது, இவ்விடயத்தை ஒட்டி இலங்கையில் கேள்வி எழுப்பும் கொழும்புப் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்துக்கும் அங்குள்ள ஆயர் பேரவைக்கும் இடையில் முரண்பாடான நிலைமை உள்ளது என்று கயிறு விட்டுத் தப்பப் பார்த்தார் ரணில். ஆனால், அது முற்றிலும் தவறான கருத்து என்று ஆயர் பேரவையே உடனடியாக மறுப்பு வெளியிட்டு ரணிலின் முகத்தில் கரியைப் பூசியது.

இப்போது, ஜனாதிபதி ரணிலின் அந்தப் பேட்டிக்கு அந்த ‘டொச்சவெலா’ தொலைக்காட்சி ஊடாகவே விளக்கமளித்து, சர்வதேச ரீதியில் உண்மையை எடுத்துரைப்பதற்காக கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஜேர்மனுக்குப் புறப்படுகின்றார் என்று தெரிகின்றது.

அவருக்கு மேலதிகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ‘டொச்சவெலா’ தொலைக்காட்சியில் இருந்து கிடைத்த பேட்டிக்கான அழைப்பை ஏற்றிருக்கின்றார் என அறிய வந்தது.

இருவருமே ரணிலின் அதே ஆங்கில மொழியிலேயே சரளமாக அவருக்குப் பதிலடி தருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

‘டொச்சவெலா’ பேட்டியில் ரணில் இன்னொரு விடயத்தையும் அந்தச் செய்தியாளர் மீது பாயும் போது குறிப்பிட்டார்.

“சர்வதேச விசாரணை, சர்வதேச விசாரணை என்று வலியுறுத்துகின்றீர்களே. நாங்கள் முழு இறைமையுள்ள ஒரு நாடு. வெளியார் அங்கு வந்து விசாரணை நடத்த இடம் அளிப்பதற்கு நாம் என்ன இரண்டாம் தர மக்கள் என்று நீங்கள் (மேற்குலகினர்) கருதுகின்றீர்களா? மேற்கு நாடுகள் இப்படி தங்கள் நாட்டில் அனுமதித்தனவா?” – என்ற சாரப்பட அவரது பதிலடி ஆக்ரோஷமாக இருந்தது.

ஆனால் அந்தக் கேள்வியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மன் செய்தியாளரிடம் கேட்டிருக்கவே கூடாது என்பதுதான் என் கருத்து.

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின்னர், பல சர்வதேச தரப்புகளின் விசாரணைகளை அனுமதித்து, சகித்து, கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய இக்கட்டுக்கு உள்ளான நாடு ஜேர்மனி. அதை எல்லாம் – சர்வதேச விசாரணைகளை எல்லாம் – ஏற்றுக் கொண்ட ஒரு நாட்டின் செய்தியாளரிடம் போய் அதை நீங்கள் வலியுறுத்துகின்றமையால் எங்களை என்ன இரண்டாம் தர மக்கள் என்றா கருதுகின்றீர்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்க முடியாது. கேட்கக்கூடாது. ஏனெனில் அவற்றை அவர்கள் ஏற்கனவே அனுமதித்துள்ளனர். அவர்களிடம் அப்படி கேட்க ரணிலுக்குக் கூட அருகதை இல்லை.

அது மட்டுமல்லாமல், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் வெறுமனே உள்நாட்டு விடயம் அல்ல. அதில் வெளிநாட்டவர்களும் இலக்கு வைக்கப்பட்டார்கள். 45 வெளிநாட்டவர்கள் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். எனவே இது உள்நாட்டு விவகாரம் என்பதற்கு அப்பால், சர்வதேசத்திற்கும் உரிமையும் சம்பந்தமும் நேரடியாக உள்ள விடயம் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறந்து விடக்கூடாது.

வரப் போகின்ற ஜனாதிபதி தேர்தலில் பௌத்த – சிங்களப் பேரினவாத வாக்குகளை இலக்கு வைத்தும், படையினரின் ஆபத்பாந்தவன் தானே என்று காட்டுவதன் மூலம் படைத்தரப்பின் ஆதரவை வளைத்து போடவும் ரணில் விக்கிரமசிங்க இப்படி ஜேர்மன் செய்தியாளர் மீது பாய்ந்து விழுந்தாலும், என்றோ ஒரு நாள் அவரின் இலங்கை தேசம் சர்வதேசத்தின் முன் கைகட்டிப் பதில் கூற வேண்டிய கட்டாயம் நேர்ந்தே தீரும். சில சமயங்களில் அதற்கு சில ஆண்டுகள் பிடிக்கலாம். அவ்வளவுதான்...!

## 15 வயது சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

படுகாயமடைந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டம், மீரிகமை பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காணிப் பிரச்சினையால் இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி இறுதியில் கொலையில் நிறைவடைந்துள்ளது.

15 வயதுடைய ஆர்.எம். சம்பத் என்ற சிறுவனே இதன்போது கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் தந்தை உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேலுக்கு அனுமதியின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலுக்குள் செல்ல முயன்றபோது, இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் கூறியுள்ளார்.

(மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்.)

# யாழ்.போதனாவில் பொதுமகனைத் தாக்கிய இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நீக்கம்

## வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வளாகத்தினுள் பொதுமகன் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் வைத்தியசாலைக்குக் கடமைக்கு அனுப்ப வேண்டாம் எனப் பாதுகாப்பு நிறுவனத் திடம் தான் அறிவித்துள்ளார் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித் தார்.

யாழ். போதனா வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகில் பொதுமகன் ஒருவரைப் பாதுகாப்பு உத்தியோகத் தர்கள் இருவர் சரமாரியாகத் தாக்கும் காணொலி சமூக ஊடகங்களில் நேற்று வைரலாகியுள்ளது.

அது தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர்





மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொதுமகன் ஒருவர் பாதுகாப்பு ஊழியர்களால் தாக்கப்பட்ட சம்பவம் கண்டிக்கப்பட வேண்டியது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் வைத் தியசாலைப் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் தனியார் நிறுவனத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்பு டைய இரண்டு காவலாளிகளையும் நேற்றிலிருந்து வைத்தியசாலை பாது காப்புக் கடமைக்கு அனுப்ப வேண் டாம் எனவும் அவர்களுக்கு அறிவித்துள் ளேன்.

பொதுமக்கள் வைத்தியசாலைக்குச் சுதந்திரமாக வந்து தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் மே-ற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் மூலம் அவை மழுங்கடிக்கப்படக்கூடாது.” – என் றார்.

# மஹிந்தவைச் சந்தித்த ஜெய்சங்கர்



இலங்கை வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுடன் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவைக் கொழும்பில் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடிவிட்டே நாடு திரும்பியிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவுடனான இந்தக் கலந்துரையாடலின் போது, இலங் கையின் அரசியல் நிலவரம், ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற் பாடுகள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன முன்நிறுத்தவுள்ள ஜனா திபதி வேட்பாளர் குறித்தும் கலந்து ரையாடப்பட்டுள்ளது.

### சுரண்டல்வாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவிரித்தாடும் நாட்டில் இரத்தம் ஏற்றுவதற்கும், சிறுநீரக மாற்று அறு வைச் சிகிச்சைக்கும் கூட மருந்துகள் இல்லை.

வங்குரோத்தடைந்துள்ள இந்நாட்டில் மருந்துகள் கூட திருடப்படும் அளவுக்கு ஊழல் உச்சம் ஏறும் சூழல் உருவாகி யுள்ளது.

தற்போதைய அரசு போலியான முறையில், போலி நிறுவனம் ஒன்றின் ஊடாக போலியான புற்றுநோய் மருந்தை இறக்குமதி செய்துள்ளது. இம்மருந்தால் குணமாகக்கூடிய புற்றுநோயாளிகள் கூட நிச்சயம் இறப்பார்கள்.

இது போன்ற குற்றச் செயல்களைச் செய்து பணம் சம்பாதிக்கும் சுரண்டல் பேராசை அரசியலை ஒழிக்க டிஜிட்டல் மயமாக்கல் அவசியமாகும். பாடசாலை கல்விக் கட்டமைப்பு, சுகாதார கட்ட மைப்பு மற்றும் பொது நிர்வாகத்தில் அது ஏற்படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய டிஜிட்டல் மயமாக்கலை நடைமுறைப்படுத்த ஆங்கில மொழி, கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை நன்கு கற்ற சிறார் கள் தலைமுறையே நாட்டுக்குத் தேவை.

இவ்வாறானதொரு சந்ததியைப் பலப்படுத்தும் நோக்கிலே பிரபஞ்சம் ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

திருட்டு, இலஞ்சம், ஊழல், மோசடி என்பவற்றால் பொதுச் சொத்துக்கள் மற்றும் பொது வளங்களை அழித்தல் ஆகியனவே இந்நாட்டின் அழிவுக்கு முக்கியக் காரணங்கள். இந்தத் திருட்டைத் தடுக்க வேண்டுமானால் டிஜிட்டல் மய மாக்கல் கட்டாயம் இடம்பெற வேண்டும்.” – என்றார்.

### ஜெய்சங்கரின் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை அவருக்கு உயர்ந்த மட்டத் தில் ‘வை’ ரகப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அது இப்போது நாட்டின் தலைவருக்கு ஒத்ததாக ‘இஸட்’ ரகத்துக்கு உயர்த் தப்பட்டுள்ளது.

ஒரு டசினுக்கும் குறையாத கொமாண் டோக்கள் எந்நேரமும் அவரைச் சூழ வியூகம் வகுத்து நிலைகொண்டிருப்பர். அவரது பாதுகாப்பு ஆறு அடுக்கு வளை யமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வழமை யான பாதுகாப்புக்கு மேலதிகமாக சி.ஆர். பி.எவ். ஜவான்களின் விசேட பாதுகாப்பு வளையமும் வழங்கப்பட்டுள்ளது.

அவரது நகர்வுகள், போக்குவரத் துக்கள் மிக இரகசியமாகப் பேணப்படும் என்றும், அவர் பிரசன்னமாகக் கூடிய இடங்கள் துல்லியமான கவனிப்புக்கு உள்ளாகும் என்றும், அவரது பாதுகாப் புக்காக விசேட நடைமுறைகள் பின் பற்றப்படும் என்றும் சம்பந்தப்பட்ட

(7ஆம் பக்கம் பார்க்க...)

# இன்று ஆரம்பமாகும் நவராத்திரி



இன்று ஆரம்பமாகும் நவராத்திரியில் முதல் மூன்று நாள்களும் துர்க்கையையும், அடுத்த மூன்று நாள்களும் லட்சுமியையும், கடைசி மூன்று நாள்களும் சரஸ்வதியையும் நினைத்து வழிபடுவது வழக்கம்.

நவராத்திரி, இந்தியாவின்வடமாநிலங்களில் துர்கா பூஜையாக வழிபடப்படுவதால் இந்த ஒன்பது நாள்களும் அங்கு நவதுர்க்கை பூஜை செய்வதும் வழக்கமாக உள்ளது. அன்னை பல்வேறு ரூபங்களில் பக்தர்களுக்கு அருள் புரியும் அற்புதமான காலம் இதுவாகும்.

அம்பிகை, அசுரனை வதம் செய்வதற்காக தவம் செய்த காலம் நவராத்திரி ஆகும். மகாளய அமாவாசைக்கு அடுத்த நாளான பிரதமையில் நவராத்திரி வழிபாட்டைத் தொடங்க வேண்டும். இந்த ஆண்டு நவராத்திரி இன்று தொடங்கி 23ஆம் திகதி வரைக் கொண்டாடப்படுகிறது.

வழக்கமாக மகாளய அமாவாசை நாளிலிலேயே நவராத்திரி கொலு



அமைப்பதற்கான வேலைகளைத் தொடங்கி விடுவார்கள். கொலு படிகள் அடிக்கு, நல்ல நேரத்தில் இரண்டு பொம்மைகளையாவது எடுத்து வைத்து விடுவார்கள். ஆனால் இந்த ஆண்டு மகாளய அமாவாசை நாளில் சூரிய கிரகணமும் சேர்ந்தே வருகிறது.

## நவராத்திரி கொலு அமைக்கும் நேரம்

இந்துக்களின் வழிபாட்டு முறைகளின் படி கிரகணம் என்பது சுப காரியங்கள் செய்வதற்கு ஏற்ற காலம் இல்லை என கருதப்படுகிறது. கிரகணத்தின் போது கோவில்கள் அடைக்கப்பட்டு விடும். கிரகண நேரம் நிறைவடைந்த பிறகு கோவில் முழுவதும் சுத்தம் செய்து, தெய்வத்திற்கு அபிஷேகம், சாந்தி மற்றும் பரிகார பூஜைகள் செய்த பிறகே மீண்டும் பக்தர்கள் தரிசனத்திற்காக அனுமதிக்கப்படுவார்கள். இந்த ஆண்டு சூரிய கிரகணம் நேற்று இரவிலேயே நிகழ்ந்தது.

அதனால் நேற்று மகாளய அமாவாசை அன்று கொலு அடுக்கி வைத்தால் மறுநாள் இன்று காலை வீடு முழுவதையும், பூஜை பொருட்கள் அனைத்தையும் சுத்தம் செய்த பிறகே நவராத்திரி பூஜையைத் தொடங்க வேண்டும். இது அனைவருக்கும் சிரமம் என்பதால் இன்று காலையில் கொலு அமைப்பதே சிறப்பானதாகும். நேற்றே கொலுவிற்கான பொம்மைகள், கொலு படிகளை துடைத்து சுத்தம் செய்து வைத்திருந்தால் இன்று காலை வீட்டைச் சுத்தம் செய்து கொலுப் படிகள் அடுக்குவதற்கு எளிதாக இருக்கும்.

இன்று காலை 06.05 மணி முதல் 11.45 மணி வரையிலான நேரத்திற்குள் கொலு படிகள் அடுக்கி, ஏதாவது ஒரு நைவேத்தியம் படைத்து, நவராத்திரி பூஜையை தொடங்கி விட வேண்டும். மாலை 6 மணிக்கு மேல் நவராத்திரி பூஜை செய்யலாம். ராகு காலம், எமகண்டம் தவிர்த்து பூஜை செய்ய வேண்டும். காலை பூஜையை 9 அல்லது 10 மணிக்கு நிறைவு செய்து விட வேண்டும். மாலை பூஜையை 6 மணிக்கு மேல் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம்.

## முதல் நாள் வழிபாடு

நவராத்திரியின் முதல் மூன்று நாள்கள் அம்பிகையைத் துர்க்கையாக வழிபட வேண்டும். துர்க்கை என்றாலே துக்கங்களை நீக்கி, நமக்கு அரணாக இருந்து காக்க கூடியவள் என்று அர்த்தம். அனைத்திலும் வெற்றியை தரக் கூடியவள் என்பதாலும், அம்பிகை தவம் செய்ய தொடங்கிய காலம் என்பதால் இந்த நாளில் நாமும் அவளை மனதார நினைத்து வழிபடலாம். நவராத்திரியின் முதல் நாளில் அம்பிகையை உமா மகேஸ்வரியாக அலங்கரித்து வழிபட வேண்டும். நவ துர்க்கைகளில் முதல் தேவியான சைலபுத்திரியாகவும் வழிபட வேண்டும். அரிசி மாவினால் பொட்டு வகை கோலம் அமைத்து, மலர்களில் மல்லிகையும், இலைகளில் வில்வமும் கொண்டு அம்பிகையை அர்ச்சித்து வழிபட வேண்டும். நைவேத்தியமாக வெண் பொங்கல் அல்லது சுண்டல் படைத்து வழிபட வேண்டும். பாட வேண்டிய ராகம் தோடி. இந்த நாளில் அம்மனுக்கு பச்சை நிற வஸ்திரம் சாத்தி அலங்கரிக்க வேண்டும். நாமும் பச்சை நிற உடை உடுத்து பூஜை செய்ய வேண்டும்.



# பதுளை ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவிற்கு மண்சரிவு அபாயத்துக்கான சிவப்பு நிற எச்சரிக்கை



10 மாவட்டங்களின் சில பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவிற்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வட மத்திய, மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் 75 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் . இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# புலிகளின் ஆயுதங்களைத் தேடி சம்பூரில் அகழ்வு நடவடிக்கை!





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மூதூர் நவரெட்ணபுரம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான வயல் காணியொன்றின் மரத்தின் கீழ் விடுதலை புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்து அகழ்வு வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

சம்பூர் பொலிஸாரினால் பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு நேற்று அகழ்வு வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

சம்பூர் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மூதூர் நீதிமன்ற பதில் நீதவான் ரஜீவன் டெசீபா முன்னிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினர், பொலிஸார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மூதூர் தள வைத்தியசாலையின் வைத்திய குழுவினர் உள்ளிட்ட பல பிரிவினரும் அகழ்வுப்பணி இடம்பெற்ற இடத்தில பிரசன்னமாகியிருந்தனர்.

எனினும் இந்த அகழ்வு நடவடிக்கையில் எவ்வித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை எனவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# கண் நோய்ப் பரவல் நாட்டில் அதிகரிப்பு

## சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தல்

நாட்டில் தற்பொழுது கண் நோய்கள் அதிகளவில் பரவி வருகிறது என கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் விசேட கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் கபில பந்து திலக்க தெரிவித்துள்ளார்.

கண் நோய்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கண்கள் சிவத்தல், இமைகள் வீங்குதல் ஆகியன இந்த நோய்களுக்கான அறிகுறிகளாகும்.

குழந்தைகள் மத்தியில் அதிகமாகப்

பரவி வரும் இந்நோய் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என கண் வைத்திய நிபுணர் வைத்தியர் கபில பந்துதிலக்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.



தொடுகை மூலமே இந்த நோய் பரவக்கூடிய அபாயம் அதிகமாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வர்த்தக வாகனங்கள் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதி மீண்டும் இரத்து

வர்த்தக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி மீண்டும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்ததையடுத்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வாகனங்களை மீள இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த உப குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னரே மீண்டும் வர்த்தக வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஏனைய வாகனங்களின் இறக்குமதிக்கு இதுவரை எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த மாதம் முதல் இழப்பீடு வழங்கப்படும்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு அடுத்த மாதம் முதல் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் 58 ஆயிரத்து 770 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கை வறட்சி காரணமாக அழிவடைந்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 965 என மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ் ஈழத்திற்கான தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டதை வீரசேகர மறக்கக் கூடாது

## ரெலோப் பிரமுகர் சபா குகதாஸ் எடுத்துரைப்பு



தமிழ் ஈழத்திற்கான மக்கள் ஆணை கிடைத்து 46 ஆண்டுகள் என்பது சரத் வீரசேகரவுக்கு தெரியாதா என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ அமைப்பின் முக்கியஸ்தருமான சபா குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே குகதாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அமெரிக்கா விசா கிடைக்காத நிலையில், நீதிபதி சரவணராஜ - விவகாரத்திலும் ஆட்டம் கண்டு புலம்பியவர். தற்போது புதுக் கயிறு விடுவது போல தமிழர்கள் ஆயுத பலத்தால் கிடைக்காத தமிழீழத்தை பதின்மூன்றாம் திருத்தம் மூலம் பெற முற்படுகிறார்கள் என முட்டாள் தனமாக சிங்கள அப்பாவி மக்களை ஏமாற்றி, தனது அரசியல் பிழைப்பை நடத்த அறிக்கை விட்டுள்ளார்.

சரத் வீரசேகரவுக்கு வரலாறு தெரியாவிட்டால் 1977 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் தேர்தல் திணைக்களத்தில் இருக்கும். அதனை எடுத்து பாருங்கள் எனக் கூறிவைக்க விரும்புகிறோம்.

அந்த விஞ்ஞாபனத்தின் பிரதான கோரிக்கை தமிழீழத்திற்கான சர்வசன வாக்கெடுப்பை மக்கள் ஆணையாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோரியிருந்தனர்.

இதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த ஒட்டுமொத்த தமிழ் மக்களும் முழுமையான ஆணையை வழங்கினர்.

வடக்கு கிழக்கில் 19 தொகுதிகளில் 18 தொகுதி தமிழீழத்திற்கான ஆணையாக 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகினார்கள்.

19 ஆவது தொகுதியாகிய கல்குடாவில் 577 வாக்குகள் பின்னடைவு ஏற்பட்டது ஆனால் 95 வீத மக்கள் தமிழீழத்திற்கான சர்வசன வாக்காக தமது ஆதரவை வழங்கினர்.

இப்படியான தமிழ் மக்களின் ஜனநாயக கோரிக்கையை சிங்கள ஆட்சியாளர் மறுத்து வன்முறையை கட்டவிழ்த்ததன் விளைவே நாட்டின் இன்றைய அவல நிலைக்கு மிகப் பிரதான காரணம்.

பதின்மூன்றாம் திருத்தம் தற்போதைய அரசமைப்பில் ஓர் இடைச் செருகலாகவே உள்ளது.

முழுமையான அதிகாரங்கள் முறைப்படி மாகாணங்களுக்கு பகிரப்படவில்லை என்பது இலங்கையில் வாழும் சாதாரண குடி மகனுக்கும் தெரியும். ஆனால் வீரசேகர இதனை பெரிய நாகபாம்பு போல காட்டி இனவாதம் பேசுகிறார்.

இலங்கைத் தீவில் எதிர்காலத்தில் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச பூகோள பிராந்திய சக்திகள் தமிழீழத்தை உருவாக்கியே தங்களது அடுத்த கட்ட பூகோள அரசியலை நகர்த்த முடியும் என்ற கசப்பான உண்மையை சரத் வீரசேகர புரிந்துதான் ஆக வேண்டும். - என்று உள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஜனாதிபதி ஆட்சி முறைமை 'அவுட்'?

தான் அதிகாரத்தில் தொடர்வதற்காக என்னென்ன மார்க்கங்களைப் பயன்படுத்தலாமோ அவற்றில் எல்லாம் பயணிப்பதற்கு விடாது முயற்சித்து வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வாய்ப்பான எல்லாக் கதவுகளையும் திறக்கப் பண்ண அவர் முயலுகின்றார். விடாது முயலுகின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சமாதான முயற்சி, பதிமூன்றாம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் என்று அவர் அவ்வப்போது அவிழ்த்து விடும் பலூன்கள் இத்தகையவைதான் என்று ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தோம்.

இவற்றின் உச்சகட்டமாக, எல்லா வழிகளும் சரிப்பட்டு வராவிட்டால், தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடித்து, அதன் மூலம் அதிகாரத்தில் தொடரலாமா என்ற நப்பாசையும் அவருக்கு இருப்பதாகத் தெரிகின்றது. அது தொடர்பான செய்திகளும் கூட, அவர் பக்கத்தில் இருந்து கசியத்தான் செய்கின்றன.

இவை எல்லாமே சரிவராவிட்டால், இறுதியாக ஓர் ஆயுதத்தையும் பயன்படுத்த அவர் மனதில் திட்டமிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அதற்கான முன் ஆயத்தங்களையும் கூட அவர் செய்து வருகிறார் என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அடுத்த ஆண்டு பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியாக வேண்டும். அத்தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்றால், அந்தப் பதவி எதிர்த்தரப்புக்கும் கூடப் போய்விடக் கூடாது என்ற கங்கணத்தில் அவர் இப்போது இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அதற்காக நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையே ஒழிக்கவும் அவர் தயாராகி வருகின்றார் எனத் தெரிகின்றது.

அவரின் இத்திட்டம் குறித்து ஏற்கனவே இப்பத்தியில் கோடிகாட்டி இருந்தோம்.

இனிமேல், நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவி அடுத்த 15 ஆண்டுகளுக்கு ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அவரது அரசுக்கு முண்டு கொடுத்து நிற்கும் மொட்டுக் கட்சிக்கோ கிடைக்கக்கூடிய அரசியல் சூழ்நிலைகளோ வாய்ப்புகளோ அறவே கிடையாது என்பதுதான் தென்னிலங்கை அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பீடு.

அத்தகைய பின்புலத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை எதிரணிக்குப் பறி கொடுத்தால் ரணிலின் ஐ.தே.கட்சியும் மொட்டுக் கட்சியும் இப்போதைக்கு மீண்டெழவே வாய்ப்பு வராது என்பதை உணர்ந்துள்ள ஜனாதிபதி ரணிலும் அவரது அரசுக்கு முண்டு கொடுக்கும் மொட்டுக் கட்சியின் முக்கிய தலைவர் பஸில் ராஜபக்‌ஷவும் சேர்ந்து, தமக்குக் கிடைக்காதது எதிர் தரப்பின் கைக்கும் போய் விடாமல் செய்வோம் என்ற ஏற்பாட்டில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையே ஒழிக்கும் திட்டத்திற்கு வந்து விட்டனர் என்று தெரிகின்றது.

தமிழர்களைப் பொறுத்தவரை யார் குத்தியாவது அரிசியானால் சரி என்பதுதான் நிலைப்பாடு. இந்த நாட்டுக்கு பெருங்கேடு விளைவித்த - எதேச்சாதிகாரத்துக்கு வழி செய்த - இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை அடியோடு ஒழிந்தால் நல்லதுதான் - எந்த வழியிலேனும்!

# டெங்கு நோய்ப் பரவல் 30 வீதம் அதிகரிப்பு!

நாட்டில் டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 684 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதற்கு முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் கடந்த வாரத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களில் 48.2 வீதமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 146 டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 65 ஆயிரத்து 479 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த நிலையில், இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் அது டெங்கு காய்ச்சலாக இருக்கலாம் எனவும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனடியாக வைத்தியரை நாடுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# இணையம் ஊடாக வேலை வாய்ப்பு; பண மோசடியில் ஈடுபட்டவர் கைது



இணையத்தளங்கள் மூலம் வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தருவதாக கூறி 90 லட்சம் ரூபா பண மோசடி செய்த நபர் கொழும்பு ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 34 வயதுடையவர். கரந்தெனிய, தெனகொட பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

இந்த நபர் தொடர்பான முறைப்பாடுகளின் அடிப்படையில் ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு 3 வங்கிக் கணக்குகள் மற்றும் 72 லட்சம் ரூபா பணம் இருப்பதாகவும் ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகளின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர் கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஜெய்சங்கரின் பாதுகாப்பு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)


வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்து சமுத்திர எல்லைப்புற நாடுகளின் மாநாடு இவ்வாரம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொள்வது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் நேரத்துடனான ஏற்பாடாகும். தவிர்க்க முடியாமல் அதற்கு அவர் வருகை தந்தாலும், ஒரே நாளில் இலங்கை விடயத்தைச் சுருக்கிக் கொண்டு அவர் புதுடில்லி திரும்பியமைக்குப் பாதுகாப்பு எச்சரிக்கைகளே காரணம் என்று கூறப்படுகின்றது.

இஸ்ரேல் – பாலஸ்தீன போரில் இஸ்ரேலுக்குச் சார்பான நிலைப்பாட்டை இந்தியா எடுத்து, எப்போதும் இஸ்ரேலோடு இந்தியா துணை நிற்கும் என்ற முடிவை புதுடில்லி அறிவித்தமையை அடுத்து, இந்தியாவின் வெளிவிவகார கொள்கை தொடர்பில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் சீற்றம் அதிகரித்திருக்கலாம் என்று கருதப்படும் சூழலிலேயே ஜெய்சங்கருக்கான பாதுகாப்பு திடுதிப்பென அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

# விஜயின் 'லியோ' படத்திற்கு நெருக்கடி: தி.மு.க. அரசு மீது சீமான் குற்றச்சாட்டு





நடிகர் விஜய் நடிப்பில் வெளியாக இருக்கும் 'லியோ' திரைப்படத்திற்கு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வரும் நெருக்கடிகள் அரசியல் நோக்கம் கொண்டது எனவும் வேண்டுமென்றே விஜயை தி.மு.க. அரசு தொந்தரவு செய்கிறது என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

'லியோ' திரைப் படத்தை வைத்து அரசியல் செய்யவில்லை என்று சொல்வதே ஒரு அரசியல்தான். ஏனைய படங்களுக்கு எல்லாம் வழங்கப்படாத நெருக்கடி ஏன் விஜய் நடித்துள்ள படத்திற்கு மட்டும் தரப்படுகிறது. பொலிசார் பாதுகாப்பு எல்லாம் தேவை இல்லாத வேலை. இதேபோல ஏன் ஜெயிலர் படத்திற்கு செய்யவில்லை.

தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசு விஜயை தொந்தரவு செய்வது வெளிப்படையாக தெரிகிறது. இதற்கு முன்பு வெளியான விஜய் படங்களுக்கு கூட இவ்வளவு நெருக்கடி இல்லை. அதுதான் சந்தேகத்தை எழுப்புகிறது.

சினிமா வியாபாரம் பெருகிவிட்ட நிலையில் சிறப்புக் காட்சிகள் இருந்தால் தான் லாபம் கிடைக்கும். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது சிறப்புக் காட்சிகளுக்கு அனுமதியளிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள லியோ திரைப்படம் ஒக்டோபர் 19 ஆம் திகதி திரைக்கு வருகிறது.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே வெளியாகும் இந்த படத்தை திரையிடும்போது, பார்வையாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், வாகன நிறுத்துமிடங்கள், போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தக் கூடாது மற்றும் அதிக கட்டணத்துக்கு டிக்கெட்டுகள் விற்பனை செய்யக் கூடாது என சில கட்டுப்பாடுகளை தமிழக அரசு விதித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.கவை ஒற்றுமையால் மட்டுமே வீழ்த்த முடியும் என்கிறார் ஸ்டாலின்

பா.ஜ.கவை ஒற்றுமையின் மூலமாக மட்டுமே வீழ்த்த முடியும். இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைப்பதன் மூலமாக மகளிர் உரிமை மட்டுமல்ல, அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைக்கும் இந்தியாவை நாம் உருவாக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் தி.மு.க. மகளிரணி சார்பில் 'மகளிர் உரிமை மாநாடு' நேற்று நடைபெற்றது. இதில் தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இருக்கும் பெரும்பாலான மாநிலத்தைச் சேர்ந்த பெண் தலைவர்களை அழைத்து வந்து, ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த மாநாடு, தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடாக மட்டுமல்ல, இந்தியப் 



பெண்களின் மாநாடாக அமைந்துள்ளது என்பதை நான் பெருமையோடு பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

இவை அனைத்துக்கும் மகுடம் வைப்பது போல அன்னை சோனியா காந்தி வருகை தந்துள்ளார்கள். கருணாநிதி சொன்னதைப் போலவே நாம் நாற்பதுக்கு நாற்பது வெல்ல, அகில இந்திய அளவில் காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அப்போது தனக்காக காத்திருந்த பிரதமர் பதவியை மறுத்து இந்திய அரசியல் வானில் ஒரு கம்பீரப் பெண்மணி என நின்றவர் சோனியா காந்தி.

பா.ஜ.கவை ஒற்றுமையின் மூலமாக மட்டுமே வீழ்த்த முடியும். தமிழ்நாடு இதை 2019 தேர்தல் முதலே நிரூபித்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ளது போல ஒன்றுபட்ட கூட்டணி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.

பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் நமக்கிடையேயான சிறிய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நின்றால், நம்மால் நிச்சயம் இந்திய மக்களுக்கு எதிரான சக்தியான பா.ஜ.க.வை வீழ்த்த முடியும். இங்கே வருகை தந்துள்ள சகோதரிகள் இந்தச் செய்தியை உங்கள் கட்சித் தலைவர்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# வெற்றியை நோக்கி நகரும் நியூசிலாந்தின் தேசியக் கட்சி





நியூசிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தற்போது ஆட்சியில் இருக்கும் தொழில் கட்சி தோல்வி அடைவது நிச்சயம் என ஆரம்ப கட்ட தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த தேர்தலில் நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தலைமையிலான தொழில் கட்சி பெரும் வெற்றி பெற்றது.

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் ஜெசிந்தா அர்டன் பதவி விலகிய பின்னர், க்ரிஸ் ஹிப்கின்ஸ் பிரதமர் ஆனார். இவரது ஆட்சி காலத்தின் போது நியூசிலாந்து வரலாறு காணாத புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தை சந்திக்க நேரிட்டது.

அத்துடன், நாட்டின் பண வீக்கம் பொருளாதாரத்தை மந்த கதியாக்கியது. அதனால், க்ரிஸ் தலைமையிலான அரசின் மக்கள் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது.

எதிர்க்கட்சியான தேசியக் கட்சி க்ரிஸ்தோபர் லக்ஸன் தலைமையில் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புதல், மக்களின் அன்றாட வாழ்க்கை செலவை குறைத்தல், வரிக் குறைப்பு, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் மற்றும் அதிகரித்து வரும் குற்றங்களை தடுத்தல் என்ற கொள்கைகளோடு இந்த தேர்தலில் போட்டியிட்டது.

இதனால், முன்னாள் எயார் நியூசிலாந்து தலைமை அதிகாரியாக இருந்த க்ரிஸ்தோபரின் மற்றும் தேசியக் கட்சியின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்தது. தற்போதைய நிலவரப்படி க்ரிஸ்தோ பர் தலைமையிலான தேசியக் கட்சி முன்னிலையில் உள்ளது. ஆயினும் சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துத்தான் ஆட்சி அமைக்கும் வாய்ப்புள்ளது. கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் சில நாட்களுக்கு கூட நீடிக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தலில் தேசியக் கட்சியின் தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங் கையை பூர்வீகமாக கொண்ட பொறி யியல் ஆலோசகர் செந்தூரன் அரு ளானந்தம் உள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

ஜூனில் முடிந்த சென்ற நிதி ஆண்டில் இலங்கைக்கு நியூசிலாந்து 357 மில்லியன் நியூசிலாந்து டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதில் பால் உற்பத்திப் பொருட்களே அதிகம்.

அத்துடன், 89 மில்லியன் நியூ சிலாந்து டொலர் பெறுமதியான பொருள் களையும் இறக்குமதி செய்துள்ளது. இதில் ஆடை உற்பதிப் பொருட்களே அதிகம் என்பதும் குறிப்பிடத்தகது.

# தோற்கடிக்கப்பட்ட அவுஸ்ரேலியாவின் ‘குரல்’ மக்கள் வாக்கெடுப்பு

அவுஸ்ரேலிய பிரதமர் அந்தனி அல்பனீஸி தான் ஆட்சிக்கு வந்தால் அவுஸ்ரேலிய பூர்வீக குடிகள் மற்றும் டோரஸ் நீரிணை மக்களை முதற்குடிகளாக அரசியல் அமைப்பில் அங்கீகரிப்பது தொடர்பாக ஒரு மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவேன் என்று தேர்தல் வாக்குறுதி ஒன்றை அளித்தார்.

அதன் அடிப்படையில் நேற்று அவுஸ்திரேலியாவில் ஒரு மக்கள் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. அந்த வாக்கெடுப்பு பெரு வாரியாக அவுஸ் ரேலிய மக்களால் நிராகரிப் பட்டது.

அவுஸ்ரேலியாவில் சுமார் 65 ஆயிரம் வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக தங்கள் பாரம்பரியங்களை பேணிவரும் பூர்வீகக் குடி மக்களும் டோரஸ் நீரிணை தீவு மக்களும் இன்று வரை முதற் குடிகளாக அவுஸ்ரேலிய அரசியல் அமைப்பில் அங்கீகரிப்படவில்லை.

அவுஸ்ரேலிய பூர்வீக மக்கள் அவுஸ்ரேலிய குடித் தொகையில் சொற்பமானவர்கள். ஆங்கிலேய கால னித்துவ காலத்தில் இருந்து பல்வேறு துயரங்களை அனுபவித்துவருபவர்கள். அவர்கள் வாழ்க்கைத் தரம் மற்றும் ஆயுட்காலம் நாட்டின் ஏனைய சமூகங் களை விட குறைவு. மேலும் ஏனைய சமூகங்களை விட குடும்ப வன்முறை, தற்கொலை வீதம், மற்றும் சிறைக்கு செல்லும் சதவீகிதம் அதிகமாகவே உள்ளது.

பல்வேறு அரசுகள் மாறி மாறி அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முற்சிகள் எடுத்தாலும் கைகூட வில்லை. இதற்கு காரணம் பூர்வீகக் குடிகள் சார்ந்த அரசியல் கொள்கை திட்டமிடலில் அவர்கள் கருத்தை கேட்டுக் கொள்ளாமையே காரணமாக பல்வேறு அறிக்கைகள் சுற்றிக்காட்டியது. அதனை நிவர்த்தி செய்ய அரசியல் அமைப்பில் பூர்வீக மக்களின் கருத்தை கேட்கும் ‘குரல்’ என்ற கருத்து கேட்கும் அவை ஒன்றை நிறுவவே இந்த மக்கள் வாக் கெடுப்பு நடாத்தப்பட்டது.

எதிர்கட்சிகள் இந்த அவையை நிறுவ கடும் எதிர்ப்பை தெரிவித்தன. இந்த அவை தொடர்பான தெளி வான தகவல்கள் அரசினால் வழங்கப்பட வில்லை, மக்களிடையே தேவை இல்லாத பிரிவிணையை உருவாக்கும், அநாவசிய சட்டச் சிக்கல்கள் உருவாக்கும் என்று வாதிட்டது. இறுதியில் வெற்றி கொண்டது.



# இருமுனைத் தாக்குதல் இந்தியா இலகு வெற்றி


இந்திய - பாகிஸ்தான் போட்டியைக் கண்டு களிக்கும் பல இலட்சம் ரசிகர்களில் ஒருவர்

பரம வைரிகளின் களமாடலைப் பல லட்சம் பேர் பார்த்திருக்க, பாகிஸ்தானை குறைந்த ஓட்டங்களுள் மடக்கி, வெற்றியிலக்கை இலகுவாக விரட்டி வென்றது இந்தியா.

13ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதில் அஹமதாபாத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் அப்துல்லா ஷபிக் மற்றும் இமாம் உல் ஹக் ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

எனினும், இவர்கள் முறையே 20 மற்றும் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நடையைக் கட்டினர்.

அடுத்து வந்த அணித்தலைவர் பாபர் அசாம் அசத்தலாக விளையாடி அரைச்சதம் அடித்தார். எனினும், 50 ஓட்டங்களுடன் களத்தில் நின்றபோது முகமது சிராஜ் வீசிய பந்தில் 'போல்ட்'டாகி பெவிலியன் திரும்பினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய மொஹமட் ரிஸ்வான் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார். இவர்கள் தவிர பின்னர் வந்த வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை.

இதனால், பாகிஸ்தான் அணி 42.5 ஓவர்களில் 191 ஓட்டங்களுள் சுருண்டது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில் பும்ரா, சிராஜ், ஹர்திக் பாண்டியா, குல்தீப் யாதவ் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் இலகுவான வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இந்திய அணிக்கு, அணித்தலைவர் ரோஹித் சர்மா சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தார். அதிரடியாக விளையாடிய அவர் 63 பந்துகளில் 86 ஓட்டங்களைக் குவித்தார். இவருடன் ஆடிய சுப்மன் கில் 16 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த விராட் கோஹ்லி 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஸ்ரேயாஸ் அய்யர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இறுதியில் இந்திய அணி 30.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 192 ஓட்டங்களைச் சேர்த்து இலகுவாக வெற்றி பெற்றது.

ஸ்ரேயாஸ் அய்யர் 53 ஓட்டங்களுடனும் கே.எல். ராகுல் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் பும்ரா தெரிவானார்.

இந்தப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியதன் மூலம் இந்திய அணி, தொடர்ந்து மூன்றாவது வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.

இதன் மூலம் மொத்தம் 6 புள்ளிகளைச் சேர்த்து புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணி, தான் எதிர்கொண்ட முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்றது. ஆனால், நேற்றைய மூன்றாவது போட்டியில் தோல்வியைத் தழுவியது. எனினும், புள்ளிப்பட்டியலில் தொடர்ந்து நான்காவது இடத்தைத் தக்கவைத்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இங்கிலாந்து – ஆப்கானிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.821 |
| 02 | நியூஸிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.604 |
| 03 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 2.360 |
| 04 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.137 |
| 05 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.553 |
| 06 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.699 |
| 07 | இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.161 |
| 08 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.800 |
| 09 | அவுஸ்திரேலியா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.846 |
| 10 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.907 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி



# தேசிய மட்ட உதைபந்தாட்டத்தில் சாதித்த புனித சவேரியார் மாணவர்களுக்கு பாராட்டு

**மன்னார் நிருபர்**

பாடசாலைகளுக்கிடையிலானதேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியினரைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலைளுக்கிடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடர் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி இரண்டாம் இடம்பெற்றது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் விழா, பாடசாலை அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு தலைமையில் நேற்றுமுன்தினம் (13) காலை இடம்பெற்றது.



மன்னார் பிரதான சுற்றுவட்டப் பகுதியிலிருந்து வெற்றியீட்டிய மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசையுடன் மன்னார் பிரதான வீதி ஊடாக ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டு மதிப்பளிக்கபட்டனர்.

அதேவேளை, வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் உதவி உடற்கல்வி பணிப்பாளர் பி.ஞானராஜ், விளையாட்டுத்துறை ஆசிரியர் ஆலோசகர் ஜேக்கப், முன்னாள் அதிபர் ஜூட், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





















# 6,110 ஹெக்டேயர் நிலப் பரப்பை 2025 இல் இலங்கை இழக்குமாம்

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் கடல் மட்ட உயர்வினால் எதிர்வரும் 2025ஆம் ஆண்டளவில் 6,110 ஹெக்டேயர் நிலப்பரப்பை இலங்கை இழக்கும் என சார்க் உணவு சங்கத்தின் துணைத் தலைவர்வைத்தியர் பி.ஜி. ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

அதன்படி, இது 2100ஆம் ஆண்டளவில் 25,000 ஹெக்டேயராக அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

“காலநிலை மாற்றத்தினால் சுகாதார தாக்கம்“ என்ற தொனிப்பொருளில் கீழ் களுத்துறை வாத்துவையில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் எவ்வாறு ஆரோக்கியத்தை நேரடியாக பாதிக்கிறது என்பது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர் –

“இலங்கையில் ஒரு வருடத்திற்குள் அதிதீவிர காலநிலை நிகழ்வுகள் அதிகமாக உள்ளதால், உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, இலங்கையில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் மதிய உணவுத் தாள்கள் மற்றும் 150,000 பொலித்தீன் பைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு மாதத்திற்கு தனிநபர் பொலித்தீன் பயன்பாடு ஒரு கிலோ ஆகும்.

வானிலை மற்றும் காலநிலை மாற்றம் திசையன் மூலம் பரவும் நோய்த் தொற்றுகளின் உயிரியல் மற்றும் விநியோகத்தைஒ பாதிக்கும்.

உதாரணமாக, வெப்பநிலை மாற்றங்கள், உலகளாவிய காற்று மற்றும் மழைப்பொழிவு முறைகள் மற்றும் மிதமான தட்பவெப்பநிலைகளில் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றங்கள் பூச்சி இனப்பெருக்கத்தை சாதகமாகப் பாதிக்கலாம் மற்றும் அதன் அடர்த்தியை அதிகரிக்கலாம்” – என்றும் கூறினார்.



# ரணிலின் சீன விஜயத்தின் பின்னரே புதிய சுற்றாடல் அமைச்சர் நியமனம்

சீனாவுக்கான விஜயத்தை நிறைவுசெய்த பின்னரே தற்போது வெற்றிடமாக உள்ள சுற்றாடல் அமைச்சர் பதவிக்கு புதிதாக ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிப்பாரென அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் சுற்றாடல் அமைச்சராக இருந்த நஸீர் அஹமட் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டமை சட்ட ரீதியானது என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் அமைச்சுப் பதவியையும் இழந்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் எவரும் நியமிக்கப்படாத நிலையிலிருந்த சுற்றாடல் அமைச்சு, அரசமைப்பு விதிகளின்படி, ஜனாதிபதியினது கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், தற்போது சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர், புதிய சுற்றாடல் அமைச்சர் ஒருவரை நியமிக்கவுள்ளார் என அரசாங்கத் தரப்பு தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




# மடுல்சீமை விபத்தில் மாணவன் படுகாயம்

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை – மடுல்சிமை வீதியில் அமுனுதோவ கடைக்கு அருகாமையில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதி உட்பட அதில் பயணித்த மேலும் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். மேலதிக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த 16 வயது மாணவர் ஒருவர் ஓட்டோவில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார் என மடுல்சிமை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மாணவர் கலபாரதிபுறம் மஹ தோவ பகுதியைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

காயமடைந்த மாணவர் பசறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மடுல்சிமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைப் பெண்கள் இருவர் இஸ்ரேலியப் படையால் கைது



இலங்கையர்கள் என நம்பப்படும் இரண்டு பெண்கள், இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜோர்டான் பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக இஸ்ரேலிற்குள் செல்ல முயன்ற போது, அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனிடையே, இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கு இடையில் மோதல் தலைதூக்கியுள்ள நிலையில், நூற்றுக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் தீவிரவாதக் குழுவுக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதலில் இஸ்ரேலில் பராமரிப்பாளராகப் பணிபுரியும் இலங்கைப் பிரஜை ஒருவர் கொல்லப்பட்டிருக்கலாம் என உறுதிப்படுத்தப்படாத சமூக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலில் இருந்து வந்த முகநூல் பதிவுகளின்படி, பராமரிப்பாளராகப் பணியாற்றிய இலங்கைப் பெண் ஒருவர், தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட வேலை செய்யும் இடத்திற்கு அருகாமையில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் காணப்பட்டார் எனர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பராமரிப்பாளர் கவனித்து வந்த வயதான இஸ்ரேலியப் பெண் காணாமல் போனார் எனவும், அவர் தீவிரவாதிகளால் பிணைக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன போராளிகளுக்கு இடையே கொடூரமான போர் நடந்து வரும் நிலையில் பலி எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

ஒரு வாரத்திற்கு முன்பு இஸ்ரேலிய நகரங்களில் நுழைந்து 1,300 பேரைக் கொன்று, முக்கியமாக பொதுமக்களைக் கொன்று, ஏராளமான பணயக்கைதிகளைக் கைப்பற்றிய குழுவின் போராளிகளின் வெறித்தனத்திற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் காசாவைக் கட்டுப்படுத்தும் ஹமாஸ் போராளிக் குழுவை அழிப்பதாக இஸ்ரேல் சபதம் செய்திருந்தது.

2.3 மில்லியன் பாலஸ்தீனியர்கள் வசிக்கும் ஹமாஸ் நடத்தும் காசா பகுதியை இஸ்ரேல் மொத்தமாக முற்றுகையிட்டதோடு, முன்னோடியில்லாத வகையில் வான்வழித் தாக்குதல்களால் குண்டுவீசித் தாக்கியுள்ளது.

மேற்குக் கரை மற்றும் காசா பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 2,269 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், 9,814 பேர் காயமடைந்துள்ளதாகவும் பாலஸ்தீனிய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மட்டு. பள்ளிவாசலுக்கு முன்னால் உள்ள மரத்தை வெட்ட விடாதமையால் பதற்றம்



மட்டக்களப்பு நகரில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலுக்கு முன்னால் முறிந்து வீதியில்பாதசாதிரிகள்மீதுவிழும்அபாயத்திலுள்ள உள்ள பாரிய மரத்தை நேற்று சனிக்கிழமை வெட்டுவதற்குச் சென்ற பிரதேச செயலக அதிகாரிகளை மரத்தை வெட்டவிடாது பள்ளிவாசல் நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் அங்கு ஏற்பட்ட பெரும் சர்ச்சையையடுத்து பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பள்ளிவாசலுக்கு முன்னால் வீதிச் சுற்றுவட்டத்திற்கு அருகில் பாரிய மரம் ஒன்று பழுதடைந்து முறிந்து விழும் அபாய நிலையில் இருக்கின்றது.

அந்த மரம் முறிந்து விழும் அபாயம் காணப்படுவதால் வீதியில் பயணிக்கும் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அச்சத்தின் மத்தியிலும் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலுமே பயணித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதனால் அந்த மரத்தை அகற்றுமாறு கோரி பொதுமக்கள் அவ்விடயத்தைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனை அடுத்து பிரதேச செயலாளர் மரத்தை அகற்றுவதற்கு மரக்கூட்டுத்தாபனத்திக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்றுக் காலை 11 மணிக்கு மரத்தை அகற்றுவதற்காக உதவி பிரதேச செயலாளர் தலைமையில் வீதி அதிகாரசபை பணியாளர்கள் மரத்தை அகற்றச் சென்றபோது பள்ளிவாசல் நிர்வாகம் அதனை வெட்டவிடாது தடுத்து நிறுத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது.

அங்கு பாடசாலை மாணவர்களின் பெற்றோர் ஒன்று திரண்டமையுடன், முஸ்லிம்களும் ஒன்று திரண்டனர். இதனால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. பாதுகாப்புக்காகப் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

இதனை தொடர்ந்து மரத்தை முற்றாக அகற்றுமாறு பிரதேச செயலாளர் உத்தரவிட்டுக் கடிதம் வழங்கியுள்ளார்.

மரத்தை முற்றாக அகற்ற பாதுகாப்பு தருமாறு பொலிஸாரிடம் உதவிப் பிரதேச செயலாளர் தெரிவித்த நிலையில், பள்ளிவாசல் நிர்வாகம் அகற்ற விடமாட்டோம் என பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளது. இதனால் மரம் வெட்டுப்படவில்லை.



# கொக்குத்தொடுவாயில் காட்டுயானைகள் நூற்றுக்கு அதிக தென்னைகளை அழிப்பு

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக் குத்தொடுவாய் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைகள் மக்களின் வாழ் வாதார பயிரான தென்னை மரங்களை அழித்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்தக் கிராமத்திற்குள் புகுந்த காட்டுயானைகள் தென்னந்தோட்ட செய்கையையே வாழ் வாதாரமாக மேற்கொண்டுவரும் தெங்கு செய்கையாளர்களின் நூற்றுக்கு மேற்பட்ட பயன்தரு தென்னை மரங் களை அழித்து நாசம் செய்துள்ளன.

கொக்குத்தொடுவாய் வடக்கு கிரா மத்தில் தெங்கு செய்கையினை மேற் கொண்டுவரும் இராசேந்திரம் மற் றும் சிவலிங்கம் ஆகிய இருவரின் தென்னந்தோட்டத்திற்குள் புகுந்த காட்டுயானைகள் காய்த்து பயன் பெற்றுக்கொண்டிருக்கும் சுமார் 110 தென்னங்கன்றுகளை அழித்து நாசம் செய்துள்ளன.

காய்த்துக்கொண்டிருக்கும் மரங்க ளைத் தள்ளிவிழுத்தி அவற்றில் இருந்த தேங்காய்களையும் யானைகள் சாப்பிட் டுள்ளன. பல தென்னங்கன்றுகளை குருத்து இழுத்துச் சாப்பிட்டுள்ளன.

தென்னம் பிள்ளைகளை வைத்து வளர்த்து, அதில் இருந்து பயன் எடுத்து வரும் காலகட்டங்களில் காலத்திற்கு காலம் காட்டுயானைகளால் இவ்வாறு அழிவைச் சந்திக்க நேர்வதாகத் தெங்கு செய்கையாளர்கள் விசனம் தெரிவித் துள்ளார்கள்.

வேலிகளைச் சேதப்படுத்தி தென்னந் தோட்டத்திற்குள் புகுந்து கொள்ளும் யானைகளால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், தற்போ தைய பொருளாதார விலையேற்றத்தி னால் அவற்றை சீர்செய்ய முடியாத நிலைக்குத் தாங்கள் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் காணியின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

யானைகளினால் ஏற்படும் இவ்வா றான இழப்புக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கவவதுடன், சரியான முறையில் யானை வேலிகளை அமைத் துக் கொடுத்துத் தெங்குச் செய்கையா ளர்களை ஊக்கிவிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார் கள்.










# ஜனாதிபதி பதவி இனிக் கிட்டாது என்பதால் அந்த ஆட்சிமுறைமையையே ஒழிக்க முடிவு!

## ஜனாதிபதி ரணில் - பஸில் கூட்டுத் திட்டம் எனத் தகவல்

அடுத்த 15 வருடங்களுக்கு பொது ஜன பெரமுனவில் இருந்து ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாது என்பதற்கு வலுவான சாத்தியக்கூறுகள் இருப்பதாலேயே நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரும் ஈடுபட்டுள்ளனர் என அக்கட்சியின் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் ஆழமான கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளமையுடன், அதன் பிரகாரம்தான் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வலுவான இடத்தைப் பெறுவது பஸிலின் திட்டமாக உள்ளது.

அதன்படி, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதே இந்த நேரத்தில் சிறந்த தெரிவு என்பது பஸிலின் முன்மொழிவாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை நீக்குவது இலகுவானது எனவும், அதனடிப்படையில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை அவசியமா என மக்களிடம் கேட்க முடியும் எனவும் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பின்னர் பிரதமர் தலைமையிலான நாடாளுமன்ற ஆட்சிமுறைமைக்குச்செல்ல முடியும் என பஸில் ஜனாதிபதியிடம் விளக்கமளித்துள்ளார்.

நிறைவேற்று முறைமையை இல்லாதொழிக்க பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதனை ஐக்கிய மக்கள் சக்தியாலும் தேசிய மக்கள் சக்தியாலும் எதிர்க்க முடியாது என்பது பஸிலுக்குத் தெரியும்.

அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து அல்லது தனித்தனியாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குள் குறிப்பிடத்தக்களவு இடத்தைப் பெற முடியும் என்பது பஸிலின் கணிப்பாக உள்ளது.

பஸில் பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியை சந்தித்து இந்த அரசியல் குண்டை வீசியதற்கு இதுவே காரணம் என அக்கட்சியின் வட்டாரங்களில் இருந்து மேலும் அறிய முடிகிறது.

# மொட்டுக் கட்சி சிரேஷ்டர்களுக்கு விரைவில் அமைச்சுப் பதவிகள்?



2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பொதுஜன பெரமுன மாவட்ட தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு பல தடவைகள் அக்கட்சித் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை அதற்கு சாதகமான பிரதிபலிப்பை ஜனாதிபதி ரணில் வழங்கவில்லை.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதியின் போக்குக் காரணமாக பொதுஜன பெரமுனவின் சிரேஷ்டர்கள் கடந்த காலங்களில் ஊடகங்கள் முன் விரக்தியை வெளிப்படுத்தியமையையும் காணக்கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும், அவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதை நிறுத்தினால் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படும் என்பதால், அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் விளக்கமறியலில்!



போலி ஆவணங்கள் தயாரித்த குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று சனிக்கிழமை நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற பதிவாளர் நேற்று வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

போலி ஆவணங்களைத் தயாரித்தமை மற்றும் பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிவாளர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.10.2023




நவக்கிரக நாயகர்களின் முதல்வரான சூரியன் உங்கள் ராசிக்கு 6-7 ஆம் இடத்தில் இருக்கிறார். எதிர்ப்புகளை முறியடித்து தொழிலை நிலைப்படுத்த முனைப்போடு செயல்படுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில நேரங்களில் பாதகமான நிலையை ஏற்படுத்தலாம். பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். செவ்வாய் 7 ஆம் இடத்தில் இருக்கிறார்.

உங்கள் எண்ணப்படி திருமண விடயம் சுலபமாக நடக்காது. சுக்கிரன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். கலைத்துறையினர் சில சிரமங்களை சந்திக்க வேண்டிவரும்.

கட்டுமான தொழில் கை கொடுத்து தூக்கிவிடும். இரும்பு சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் அமோகமாக நடக்கும். ராகு ராசியிலேயே அமர்ந்திருக்கிறார். மனைவி மக்களின் போக்கு மனதை காயப்படுத்தும்.




சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 5-6 ஆம் இடத்தில் இருக்கிறார். பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை அடைந்து பூரிப்புக் கொள்வீர்கள். நீண்ட காலமாக இழுவையில் இருந்த வழக்கை முடித்து வைப்பீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில முன்னேற்றமான பலன்களை கொண்டு வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வியாபாரத்தில் பல வெற்றிகளை அடைவீர்கள்.

பிள்ளைகள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவார்கள். கல்வி செலவு அதிகரித்து கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உதவிகரமாக இருப்பார்கள். மனம் விட்டு பேசி குடும்ப பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். காதல் கைகூடி வந்து நீண்ட காலக் கனவு நிறைவேறும்.

கடல் கடந்து பயணம் செல்லக் கூடிய வாய்ப்பை நண்பர் ஏற்படுத்தித் தருவார். எதிர்பாராத தன வரவு உண்டாகும்.




சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 4-5 ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். உடைந்து போன உறவுகளை ஒட்ட வைப்பதற்காக பாடுபடுவீர்கள். மனைவியின் தேவையறிந்து நடந்து கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆடம்பரமாக செலவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். தொழிலுக்கு இருந்த இடையூறுகளை தகர்த்து எறிவீர்கள். வேலை இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வீட்டில் மங்கல காரியங்கள் சிறப்பாக நடக்கும். கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் கவனமாக இருங்கள். படித்துப் பார்த்து பத்திரங்களில் கையெழுத்து போடுங்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பொருளாதாரம் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டிவரும்.




சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 3-4 ஆம் இடத்தில் அமர்ந்து இருக்கிறார். துணிச்சலுடன் தொழிலை மேம்படுத்துவீர்கள். வளர் நிலவின் வசந்த ஒளி உங்கள் வாழ்க்கை பாதையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். இழுபறியாக இருந்த இடப்பிரச்சினையை புத்திசாலித்தனமாக தீர்ப்பீர்கள். தாய் மாமன் வகையில் சில சங்கடங்கள் வரலாம். உறவினர்களுடன் ஒருமைப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நினைத்த காரியத்தை நண்பர்களில் உதவியோடு சிறப்பாக முடிப்பீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் மிகுந்த லாபத்தை கொடுக்கும்.

ஏதாவது ஒரு பிரச்சனை குடும்பத்தில் உருவாகி மன நிம்மதியை கெடுக்கும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்க விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள். நீண்டகால மனக் கவலை உங்களை விட்டு நீங்கும்.




உங்கள் ராசிநாதன் 2-3 ஆம் வீட்டில் இருக்கிறார். செலவுகளை கட்டுப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் உங்களுக்கு தோல்விதான் கிடைக்கும். புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு நண்பர்களின் உதவி தாராளமாக கிடைக்கும். போட்டி போட்டு தொழிலில் வெற்றி கண்டு எதிரிகளை பொறாமைப்பட வைப்பீர்கள். போட்டி பந்தயங்களில் மிகப் பெரிய லாபத்தை அடைவீர்கள். சொந்த பந்தங்களால் மனச்சங்கடம் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு பொற்காலம். சனி 7 ஆம் வீட்டில் இருக்கிறார். துணி வியாபாரிகள் துணிவோடு தொழிலில் இறங்கி அதிக மேன்மை அடைவார்கள். உங்களின் வளர்ச்சியை கண்டு எதிரிகள் வாயடைத்து நிற்பார்கள். தேவையில்லாத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்திற்கு இடையூறாக இருந்த வில்லங்கங்கள் விலகும்.




சூரியன் உங்கள் ராசிக்கு 1-2 ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். கூட இருந்தே உங்களை கெடுக்க நினைத்த உறவினர்களின் உள்நோக்கத்தை இந்த வாரத்தில் தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அவர்களிடம் இருந்து விலகி இருப்பது மிகவும் நல்லது. சந்திரனின் இடப்பெயர்ச்சியும் அவ்வளவு சாதகமான நிலையில் இல்லை. முதலீட்டுக்கு தகுந்த வருமானம் கிடைப்பது சற்று சிரமம்.

புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். நடைபாதை வியாபாரிகள் சிறப்பான பலனை அடைவார்கள். கலை துறையினர் பிரபலமடைவார்கள். கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய் வழி சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. எவ்வளவு தான் இணக்கமாக நடந்தாலும் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் தாண்டவம் ஆடும்.




சூரியன் 12-1 ஆம் வீட்டில் அமர்ந்திருக்கிறார். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணும் கூட்டம் உங்களுக்கு ஆசை வார்த்தை சொல்லும். அதில் மயங்கி இருப்பதை இழந்து விடாதீர்கள். வளர்பிறை சந்திரன் நீங்கள் செய்யும் வியாபாரத்துக்குப் பல வகையில் உதவியாக இருப்பார். இரு மடங்கு எச்சரிக்கையோடு எதையும் செய்யுங்கள். நல்ல நண்பர்களே விரோதியாக மாறி தொழிலுக்கு இடையூறு செய்வார்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலை சிறப்புடன் நடத்துவீர்கள். வேலைக்காக நீங்கள் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் சுணக்கம் உண்டாகும். அலைச்சல் அதிகமாகி உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் திரும்பி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஏதாவது வீட்டுச் செலவு வந்து பொருளாதார சிக்கலை உண்டாக்கும்.




சூரியன் 11-12 ஆம் வீட்டில் அமர்ந்திருக்கிறார். பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த இரவு பகலாக உழைப்பீர்கள். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்தி உற்பத்தி பெருக்கத்தை உண்டு பண்ணுவீர்கள். சந்திரனின் இடப்பெயர்ச்சிகள் சிறப்பான பலன்களையே தரப்போகின்றன. பழைய கடன்கள் மள மள என்று வசூல் ஆகும். சிறு வியாபாரிகள் அபிரிமிதமான லாபத்தை பார்ப்பார்கள். அலங்கார பொருள் விற்பனை அமோக பலனை கொண்டு வரும். கலைத்துறையினருக்கு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டில் தங்கள் திறமையை காட்டி பெரிய லாபத்தை அடைவார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் தொழிலில் சாதனை படைப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டி பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -15.10.2023




நடந்து செல்லும் இடமெல்லாம் நந்தவனமாக பூத்து சிரிக்கும் காலம் இது. எந்த தொழிலை தொட்டாலும் ஏற்றத்தை கொடுக்கும். உங்களின் செல்வாக்கும் புகழும் வெளியிடங்களில் கொடி கட்டி பறக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சந்திர பகவான் வியாபார வெற்றிக்கு உறுதுணையாக நிற்கிறார். விவசாய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்கறிஞர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் தங்களுடைய புகழை நிலை நாட்டுவார்கள். வேலை தேடியவர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும். சுப காரியங்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் விருந்த நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி பொங்கு வழியும். அரச ஆதரவு புதிய ஒப்பந்தங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும். அழகு பொருள் விற்பனை செய்பவர்கள்,




யாருக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களோ அவர்களே உங்களை புரிந்து கொள்ளாமல் மனம் நோகும்படி நடந்து கொள்வார்கள். மிக கவனமாக செயல்பட வேண்டிய காலம். சின்ன சின்ன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சந்திர பகவான் நல்லது கெட்டது என கலந்து இந்த வாரத்தில் உங்களுக்கு பலனை கொடுப்பார். திட்டம் போட்டு செய்யும் தொழிலில் சில சறுக்கள் ஏற்படலாம். ஆசை வார்த்தை காட்டும் நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள ஆடம்பரமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்தில் தாமதம் இன்றி பணம் கிடைக்கும். தொழில் வேகமாக வளர்ச்சி அடையும். குடும்பத்தில் உங்கள் திறமையை காட்ட முயற்சி செய்தால் மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்கு சென்று விடுவார்.




பூர்வீக சொத்தில் சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதற்காக நீதிமன்றத்தை நாடி செல்வதற்கான கட்டாயம் ஏற்படும். உலவுகின்ற நிலவும் உங்களுக்கு அனுசரணையாக இல்லாததால் எதிர்பாராத செலவுகள் வந்து கையில் இருந்த காசுக்கு வெடி வைக்கும். ெ தொழில் துறைகள் சீராக நடக்கும். வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உண்டாகும். உறவினர் வகையில் ஏதாவது வில்லங்கம் வந்து மன அமைதியை கெடுக்கும். எப்படிப்பட்ட இடையூறுகள் தொழிலில் ஏற்பட்டாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அரசாங்க ஒப்பந்த வேலைகளில் கால தாமதமாகும். நண்பர்களின் உதவியால் வெளிநாடு செல்வீர்கள். எதிர்பாராத பண வரவு திக்கு முக்காட வைக்கும்.




கணவனின் வருமானம் அறிந்து மனைவிமார்கள் செலவு செய்ய வேண்டும். இல்லை என்றால் வட்டிக்கு கடன் வாங்கி திரும்ப செலுத்த இயலாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை உருவாகலாம். சந்திர பகவானின் அனுக்கிரகத்தால் தொழிலில் கணிசமான லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பார்ப்பீர்கள். உட்காரக் கூட நேரமில்லாமல் பொருளாதாரத்தைப் பெருக்க ஓயாது வேலை பார்ப்பீர்கள். கண்ட இடங்களில் சாப்பிட்டு வயிற்றை கெடுத்துக் கொள்ளாதீர்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடு விலகி சகசமான நிலை ஏற்படும். பெற்றோரின் மனநிலையில் புரிந்து பிள்ளைகள் நடந்து கொள்வார்கள். மங்கள காரியங்களால் வீட்டில் கலகலப்பு கூடும். விருந்தினர்கள் வருகையால் வீடு களை கட்டும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING ANO RESEARCH CENTRE FACULTY OF MEOICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

CENTRALPAR JA-ELA

CENTRAL PARK

15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

Blue Ocean GROUP OF COMPANIES

20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA,
CGMA, MCSI (UK),
CPA (AUS), FMAAT (SL), ACS



HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park